

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், கீழடி இணையதளத்தினை தொடங்கி வைத்தார். இந்த விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் த. உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தர மோகன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திலீப் குமார் சக்ரவர்த்தி, இந்திய தொல்லியல் துறை மேனாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி, தொல்லியல் துறை கல்வியியல் மற்றும் ஆய்வு ஆலோசகர் பேராசிரியர் கா.ராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், 5914 சதுர மீட்டர் பரப்பளவில் 17.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் மற்றும் 2325 சதுர மீட்டர் பரப்பளவில் 22.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் த.உதயச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திலீப் குமார் சக்ரவர்த்தி, இந்திய தொல்லியல் துறை மேனாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி, தொல்லியல் துறை கல்வியியல் மற்றும் ஆய்வு ஆலோசகர் பேராசிரியர் கா.ராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்க நூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் வர்த்தக சங்கத் தலைவர் டாக்டர் என். ஜெகதீசன் முதல்வருக்கு செங்கோல் பரிசு வழங்கினார் . உடன் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி .மூர்த்தி, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரம ராஜா. வர்த்தக சங்க செயலாளர் எஸ்.ஸ்ரீதர் ஆகியோர் உள்ளனர்.

### வக்ஃப் திருத்த மசோதா: அவசரகதியில்

# நாடாளுமன்றக் கூட்டுக்குழுக் கூட்டத்தை நடத்துவதா?

### கூட்டுக்குழுத் தலைவருக்கு ஆ.இராசா எம்.பி. கடிதம்!

புது தில்லி, ஜன. 24-

வக்ஃப் திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டத்தை அவசரகதியில் ஜன. 24, 25 ஆகிய தேதிகளில் நடத்தாமல் ஜன.30, 31 ஆகிய தேதிகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று அக்குழுவின் உறுப்பினரும் திமுக எம்.பி.யுமான ஆ. ராசா வலியுறுத்தினார்.



இது தொடர்பாக ஜேபிசி குழுவின் தலைவர் ஜகதாம்பிகா பாலுக்கு ஆ. ராசா புதன்கிழமை எழுதியுள்ள கடிதத்தில், 'ஜன. 21-ஆம் தேதியன்றுதான் ஜேபிசி குழு உறுப்பினர்கள் பாட்னா, கொல்கத்தா, லக்னௌ ஆகிய இடங்களில் கருத்துக்கேட்பு கூட்டங்களில் கலந்து கொண்டு விட்டு ஊருக்குத் திரும்பினர். எவ்வித முன்னறிவிப்பு மற்றும் ஆலோசனையின்றி திடீரென்று அவசரகதியில் குழுவின் கூட்டம் ஜன. 24, 25 ஆகிய தேதிகளில் நடத்தத் திட்டமிட்டிருப்பது விசித்திரமானது.

விசாரணையின்போது சேகரித்த தகவல்கள், தரவுகளை ஒருங்கிணைத்து மசோதாவில் முன்மொழியப்படும் திருத்தங்கள் தொடர்பாக உறுப்பினர்கள் ஜன.22-ஆம் தேதிக்குள் தெரிவிக்க கூறியிருப்பது இயலாத ஒன்று.

எனவே, ஜன.30, 31-ஆகிய தேதிகளுக்கு ஜேபிசியின் அடுத்த கூட்டத்தை திட்டமிட வேண்டும். ஜன. 31-ஆம் தேதி நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றுவார் என்பதால் அதன் பிறகு அன்றைய தினத்தில் குழுவின் கூட்டத்தை நடத்தலாம் என பெரும்பாலான உறுப்பினர்கள் குழுவின் தலைவரான உங்களிடம் தெரிவித்தனர்.

எனவே, கூட்டுக் குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்படாவிட்டால், அது அமைக்கப்பட்டதன் நோக்கமே தோற்கடிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

### அடிப்படை வசதிகளுக்கு தீர்வு! பொதுமக்கள் பாராட்டு! மேயர் பிரியா ராஜன் தலைமையில்

# அமைச்சர் பி.கே.சேகர்பாபு வீடு, வீடாக மக்கள் குறை கேட்பு!

### 14–வது நாளாக துறைமுகம் தொகுதியில் மக்கள் தேவைகளை தீர்க்கும் பயணம்!

சென்னை, ஜன. 24 -

மேயர் பிரியாராஜன் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்டம், மத்திய சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் பாக வாரியாக 14-வது நாளாக மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணத்தில் அமைச்சர் மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு மக்கள் தேவைகள் கேட்டறிந்தார்.







முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர், வில்லிவாக்கம், திருவிக நகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் நேற்று பதினான்காவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிகழ்வில் நேற்று (23.01. 2025) மாலை 4.30 மணியளவில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, 5 வது மண்டலம், வட்டம் 56 வது வட்டத்தில் மேயர் பிரியா ராஜன் தலைமையில், பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு 56 அ வட்டத்தில் உள்ள சைவ முத்தையா ஒன்று இரண்டு மூன்று நான்கு மற்றும் ஐந்தாவது சந்து வெங்கடயர் சந்து மற்றும் சாலை விநாயகர் கோவில் தெரு ஆழ்வார்பேட்டை சந்து ஆகிய பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்கள் தேவைகளை கேட்டறிந்தும் தொடர்ந்து BRN கார்டனில் கட்டப்பட்டு வரும் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பணிகளை ஆய்வு மேற்கொண்டார்

இந்த ஆய்வின்போது மேயர் அவர்கள் செய்தியாளர்களிடம் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படியும் மக்களை தேடி குறைகளை கேட்டறிந்து அதை நிவர்த்தி செய்யும் நிலையில் இன்று துறைமுக சட்டமன்ற தொகுதி 56வது மாவட்டத்தில் அப்பாராவ் கார்டன் 1, 2, 3, 4, 5 மற்றும் சைவ முத்தையா மற்றும் சாலை விநாயகர் கோவில் தெரு ஆழ்வார்பேட்டை சந்து உள்ளிட்ட இடங்களில் ஆய்வு செய்து மக்களிடம் உள்ள குறைகளை கேட்டறிந்து அதை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியும் மேலும் காலை மாலை இருவேளையும் கொசு மருந்து அடிக்கவும் , விரைவில் 15 மண்டலங்களிலும் மாட்டு கொட்டாய் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

**ஒன்றிய அரசு இரட்டை வேடம்!**

மேலும் செய்தியாளர்கள் டங்ஸ்டன் சுரங்க விவாகரம் பற்றி கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் டங்ஸ்டன் விவகாரத்தில் பாஜக பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது போல இந்த டங்ஸ்டன் சுரங்க விவகாரத்தில் தற்பொழுது அவர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் எந்நாளும்,என் ஆட்சி காலம் இருக்கும் வரையிலும் நான் இருக்கும் வரையிலும் இத்திட்டம் வரவே வராது என்று திட்டவட்டமாக அறிவித்ததை அடுத்துத் தான் ஒன்றிய அரசு இத்திட்டத்தை ரத்து செய்திருக்கிறது என்றார்.

இந்த ஆய்வின்போது வட்டக் கழகச் செயலாளர்கள் எம் பரத் குமார் ,டி ராஜா என்கிற கதிரவன், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வி பரிமளம் மற்றும் மாநகராட்சி, குடிநீர் வடிகால் வாரியம், மின்வாரிய அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

தெரு, சைதாப்பேட்டை, ஆரணி. (3) பா.நவீன்குமார், 32/72, மோகனன் தெரு, ஆரணிப்பாளையம், ஆரணி. (4) வி.மகேஷ்குமார், 1, பள்ளிகூடத்தெரு, சைதாப்பேட்டை, ஆரணி. (5) கு.நாகராஜ், 31, அம்பேத்கர் நகர், ஆரணி. (6) சையத் அல்தாப், 23, தாவுத் தெரு, ஆரணி.

**வந்தவாசி நகரம்**

**அமைப்பாளர் :** மு.சுரேஷ்குமார், 4–சி/20, கஸ்தூரிபாய் தெரு, வந்தவாசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) த.லோகநாதன், 77, காமராஜர் தெரு, வந்தவாசி. (2) ச.மணிகண்டன், 48, கோட்டை பழைய காலனி, வந்தவாசி. (3) ஐ.அப்துல் பாசித், 3/1, கலாய்கார தெரு, வந்தவாசி. (4) சி.அருண்முருகன், 75, பெட்டி நாயுடு தெரு, வந்தவாசி. (5) அப்துல் ஜப்பார், 33, காயிதேமில்லத் நகர், வந்தவாசி.

**செய்யாறு நகரம்**

**அமைப்பாளர் :** ச.துரைசாமி, 9, பொன்னியம்மன் கோயில் தெரு, செய்யாறு.

**துணை அமைப்பாளர்கள் :** (1) இ.பாபுலால், 10/80, காமராஜர் நகர் செய்யாறு. (2) ம.ராம்ஜி அம்பேத்கர், 49–ஏ, இளங்கோ தெரு, விரிவுப் பகுதி, செய்யாறு. (3) பா.பாரதி, 6, அறிஞர் அண்ணா நகர், கொட நகர் செய்யாறு. (4) வெ.அண்ணாமலை, 119/18–சி, காந்தி சாலை, செய்யாறு. (5) த.அருண், 27/14, பழைய மசூதி தெரு, செய்யாறு.

**போளூர் பேரூர்**

**அமைப்பாளர் :** ச.பரணிதரன், 30/டி, கோவிந்தசாமி தெரு, போளூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.மணிகண்டன், 25, ஈஸ்வரன் கோயில் தெரு, அல்லி நகர், போளூர். (2) கோ.விக்னேஷ், 18, சேர்மன் சபாபதி தெரு, போளூர். (3) செ.சிவசங்கர், 34, ராஜாஜி தெரு, அல்லி நகர், போளூர். (4) சோ.தினேஷ், 5/2, வசந்தம் நகர், பெரியார் தெரு, போளூர். (5) க.தியாகராஜன், 31, நேரு தெரு, போளூர். (6) ரா.கார்த்திக், 5, ரங்கன் தெரு, போளூர்.

**சேத்துப்பட்டு பேரூர்**

**அமைப்பாளர் :** கு.பாரதிதாசன், 90–பி, மாரியம்மன் கோயில் தெரு, சேத்துப்பட்டு.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ர.கதிரவன், 12/ஏ, கம்பர் தெரு, கண்ணணூர், சேத்துப்பட்டு. (2) ஜோ.சபரி, 26, நேரு தெரு, பழம்பேட்டை, சேத்துப்பட்டு. (3) சூ.ஏசுமுத்து, 36. சவரியார் தெரு, சேத்துப்பட்டு. (4) ர.வினோத்குமார், 10, பெரியார் தெரு, போளூர் சாலை, சேத்துப்பட்டு. (5) ச.ஆனந்த், மேஸ்திரி தெரு, பாளையம், சேத்துப்பட்டு.

**கண்ணமங்கலம் பேரூர்**

**அமைப்பாளர் :** த.குமார் (எ) குமரன், 36, இராமகிருஷ்ணா உடையார் தெரு, கண்ணமங்கலம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கோ.சரவணன், 29, பிள்ளையார் கோயில் தெரு, கண்ணமங்கலம். (2) கோ.சரத்குமார், 3/8 புதிய காலனி, கண்ணமங்கலம். (3) அ.முஹமது பரீஹான், பெண் பாடசாலைத் தெரு, கண்ணமங்கலம்.

**களம்பூர் பேரூர்**

**அமைப்பாளர் :** ஜெ.ஷியாம்குமார், 49, தருமராஜா கோயில் தெரு, போளூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.சத்தியராஜ், 180/13 டாக்டர் அம்பேத்கர் நகர், களம்பூர், போளூர். (2) பு.தரணி, 14–சி, அன்னை கஸ்தூரிபாய் தெரு, களம்பூர். (3) பா.அண்ணாமலை, 3, பெருமாள் கோயில் தெரு, களம்பூர்.

**பெரணமல்லூர் பேரூர்**

**அமைப்பாளர் :** செ.சதீஷ், 54, வன்னியர் தெரு, பெரணமல்லூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.உதயகுமார், 36, மேல் யாதவர் தெரு, பெரணமல்லூர். (2) அ.லோகேஷ், தருமராஜன் கோயில் தெரு, பெரணமல்லலூர். (3) வ.பவுன்ராஜ், 19, தெற்குத் தெரு, பெரணமல்லூர்.

**தேசூர் பேரூர்**

**அமைப்பாளர் :** ம.தியாகு, 1, விஸ்வ பிராமணர் தெரு, தேசூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) இ.சையத் சாதிக், 4\2 தெள்ளார் மழையூர் சாலை, தேசூர். (2) சே.திருஞானம், 16, மாரியம்மன் கோயில் தெரு, பெலகாம்பூண்டி, தேசூர். (3) மு.அப்துல் ரஹ்மான், 82/44, தெள்ளார் மழையூர் சாலை, தேசூர்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 23–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி